காரைக்குடி நகராட்சி
08.06.2020 ம் தேதி நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை: திருகே.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)
மன்றப் பொருட்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|

.06.2020

34. காரைக்குடி நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்து புதிதாக தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்திட ரூ.20.25 கோடிக்கு கீழ்கண்டுள்ளவாறு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளை மேற்கொள்வதற்கு TNSUDP 2020-2021 திட்டத்தின் கீழ் முழுமான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிவைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Package No | Name of Streets | Length ( In Metre) | Breadth ( In Metre) | Amount ( In Lakhs) |
|---|---|---|---|---|
| 1 | Providing BT surface using Paver Machine @ Ward No 1 Iyyakaliyamman Kovil Street,Pugalenthi 1st Street,Pugalenthi 2nd Street,Pugalenthi 3rd Street,Pugalenthi 4th Street ( Auto Stand Road ), Pugalenthi Cross Street,Pugalenthi 2nd Cross Street, Kalanivasal to Vadakkuoorani Cross Street ( From Pillaiyar Koodam to Mutharaiyar Kudiyiruppu) Vairavan 1st Street,Vairavan 2nd Street, Vairavan Cross Street,Bharathiyar 1st Street, Bharathiyar 2nd Street and Bharathiyar Cross Street | 2.978 | 4.00& 4.50 | 156.00 |
| 2 | Providing BT surface using Paver Machine @ Ward No 1 Maruthupandiyar 1st Street, Maruthupandiyar 2nd Street , W.No 2 EB South Side Road , W.No 5 Bharathiyar Street,Annanagar 2nd Street,W.No 6 Arunanagar North Extension ,KailashNagar 2nd Street,Kailashnagar 3rd Street , Kailash Nagar Cross Street,W.No 12 Chellamchetti oorani Street,and Kalishwara pottal road | 3.050 | 4.00& 4.50 | 161.00 |

**தீர்மான எண்.34**
**அலுவலக குறிப்பு**
**அனுமதிக்கப்பட்டது**

08.06.2020

| Package No | Name of Streets | Length ( In Metre) | Breadth ( In Metre) | Amount ( In Lakhs) |
|---|---|---|---|---|
| 3 | Providing BT surface using Paver Machine @ Ward No 6 Arumugam Nagar Sekkalai Iyyanar Kovil Oorani South ,East,West ( Vallanadu Apartment),Vallanadu Apartment South Side Road ,Arumugam Nagar 2nd Street,Arumugam Nagar 3rd Street,Arumugam Nagar 4th Street,Arumugam Nagar 5th Street and Cross Street ,Arumugam Nagar G Block Road ( Up to Town Limit Tower) ,Arumugam Nagar G block Cross Street | 2.540 | 4.00& 4.50 | 141.00 |
| 4 | Providing BT surface using Paver Machine @ Ward No 8 Subramaniyapuram South 8th Street, Subramaniyapuram South 6th Street,Kuduvar Street,Subramaniyapuram South ( East West Road from 5th Street to 9th Street ,Park North Side),Subramaniyapuram South ( East West Road from 5th Street to 9th Street ,Park South Side),Subramaniyapuram South ( East West Road from 7th Street to 10th Street ),Shanmugaraja Road (From New Court to 5th Street ),Subramaniyapuram 7th street cross road and W.No 19 Soodamanipuram Kannagi Street | 2.525 | 7.00& 4.50 | 140.00 |

08.06.2020

| Package No | Name of Streets | Length ( In Metre) | Breadth ( In Metre) | Amount ( In Lakhs) |
|---|---|---|---|---|
| 5 | Providing BT surface using Paver Machine @ Ward No 9 Subramaniyapuram North (East -West road From 5th Street to 10th street) ,Subramaniyapuram North 6th Extension road,Subramaniyapuram North 7th Extension road,Subramaniyapuram North Cross street,Kannadhasan street,Elango Street , Thilagar nagar cross street,Subramaniyapuram North (East -West road From6th Street to 8th street Sambanthar street extension),Subramaniyapuram North 9th street,Subramaniyapuram 4th street North Extension,and W.No 19 Thiruvalluvar Salai Cross street (upto PLP Mahal) | 2.870 | 4.00& 4.50 | 153.00 |
| 6 | Providing BT surface using Paver Machine @ Ward No 9 Sekkalai Sivankovil oorani North street,Sekkalai Sivankovil oorani south street,Sekkalai Sivankovil oorani east street, Ward No 10 Kamban manimandapam Back side 1st Street,Kamban manimandapam Back side 2nd Street ,Chinnaah Ambalam school North side road, Ward No 18 Mudiyarasan salai Cross street ( KC milk center), Ward No 19Thiruvalluvar salai (From Mudiyarasan salai to M.G road),Sembagam street,Vinayagar kovil street ( from railway college road to ponnagar road juntion),Ward No 18 Kannadhasasn manimandapam back side Road,Ladies Hostal Back side Road (From Mudiyarasan salai to 100 feet road) | 3.023 | 4.00& 4.50 &5.50 | 172.00 |

08.06.2020

| Package No | Name of Streets | Length ( In Metre) | Breadth ( In Metre) | Amount ( In Lakhs) |
|---|---|---|---|---|
| 7 | Providing BT surface using Paver Machine @ Ward No 19 Anandha Nagar Main Street,Ananadha Nagar 1st and 2nd Street,Thiruvalluvar Salai Cross Street ( Carmol School Street ),120 Feet Road Cross Street ( Essar Petrol Bunk Side Road ) 120 Feet Road Cross Street ( Shanthi Roadways to thiruvalluvar street jn ), Maruthupandiyar street (Royal enfield showroom back side from Soodamnaipuram park to railway road) and W.No 21 Dharmanarayanan Chettiyar Street | 2.554 | 4.00& 4.50 | 153.00 |
| 8 | Providing BT surface using Paver Machine @ Ward No 26 Chellappan Street,W.No 28 VEVR Street,W.No 34 Nachuzhiyenthal Main street and Cross Street,Senjai Thivan pagathur salai Main street and Cross Streets and Ariyakudi Road ( from CMC road to Railway crossing) | 2.820 | 4.00& 4.50 | 163.00 |
| 9 | Providing BT surface using Paver Machine @ Ward No 8 Nadeshan chettiyar Main street and East West Cross Streets,North South Cross Streets and W.No 7 Sekkalai 1st , 2nd, and Incomtax road South and North Cross Street | 3.455 | 4.00& 4.50 | 190.00 |

08.06.2020

| Package No | Name of Streets | Length ( In Metre) | Breadth ( In Metre) | Amount ( In Lakhs) |
|---|---|---|---|---|
| 10 | Providing BT surface using Paver Machine @ Ward No 8 Bharathinagar Main Street and 1st,2nd,3rd,4th,5th,6th,7th Street W.No 16 Kattuthalaivasal pallivasal 1st cross lane( from Municipal vaikal street to Azad street),Kattuthalaivasal pallivasal 2nd cross lane ( from Azad street pallivasal to S.V Ambalam street) W.No 21 Vadivel ambalam Layout 1st cross street (surya hotel front side road),Vadakku vallampar Street and Vadakku vallampar Cross street | 3.010 | 4.00& 4.50 | 156.00 |
| 11 | Providing BT surface using Paver Machine @ Ward No 20 PAL Street ,W.No 22 Servar oorani Alround, W.No 24 Marukal Lane,Subaiah store godown lane ,W.No 25 Mullai thinnai Street & cross street,W.No 26 Managiri palaniyappa chettiyar street ,W.No 27 & 34 Veeriyan kanmoi vadakku (Ex mc paluchamy house street)W.No 30 Karunanidhi nagar 2nd street and cross street W.No 31 Pattukottaiyar street extention (upto sanitary worker quartrus) | 2.660 | 4.00& 4.50 | 150.00 |

08.06.2020

| Package No | Name of Streets | Length ( In Metre) | Breadth ( In Metre) | Amount ( In Lakhs) |
|---|---|---|---|---|
| 12 | Providing BT surface using Paver Machine @ Ward No 21 Sivan Kovil West Side Road,Sivan Kovil North Side Road,Pasumadam Veethi, W.No 33 Bharathi school South side street (upto Nagalingam pillai street),Pudhusandhai South side road,Ganeshapuram Municipal street ,Ganeshapuram Municipal cross street ,Ganeshapuram Naikar street,Ganeshapuram Naikar 1st and 2nd cross street ,Ganeshapuram Mariyamman kovil main street ,Ganeshapuram Mariyamman kovil cross street | 2.483 | 4.00& 4.50 | 158.00 |
| 13 | Providing Paver block road at W.No 8 Soodamanipuram North 1st.2nd,3rd,4th,5th Street and Cross Streets,W.No 20 AR.AM.RM Street ,North and East seniyar street W.No 9 ,Thilagar Nagar 1st and 2nd Cross Street W.No 34 Nagalingampillai Street | 2.138 | 3.50&4.0 | 132.00 |
| | **Total** | **36.106** | | **2025.00** |

அலுவலகக்குறிப்பு :

அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்(பொ)
காரைக்குடி நகராட்சி

காரைக்குடி நகராட்சி
30.06.2020 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை: திருகே.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)
மன்றப் பொருட்கள்

<table>
<tr><th>Date of meeting of the council</th><th>S.No.</th><th>Subject in the Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>30.06.2020</td><td>1</td><td>

**35.** காரைக்குடி நகராட்சி மதுரை மண்டலத்தில் சிறப்புநிலை நகராட்சி உள்ளது. இந்நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளதால் பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பல்வேறு ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்துவருகிறார்கள். இந்நிலையில் வகுப்பு–1 முதல் 5ம் வகுப்புவரை ஒப்பந்ததாரர்கள் உள்ளனர். ஒப்பந்ததாரர்கள் பதிவு கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (Engineering Manual) இன்ஜினியரிங மென்யூல் படி கீழ்க்கண்டவாறு கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டு வருகிறார்கள்.

<table>
<tr><th>வ.எண்.</th><th>வகுப்பு விவரம்</th><th>புதிய பதிவு கட்டணம்</th><th>புதுப்பித்தல் கட்டணம்</th><th>விண்ணப்பக் கட்டணம் + விற்பனை வரி</th></tr>
<tr><td>1</td><td>முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு</td><td>4000.00</td><td>400.00</td><td>600.00</td></tr>
<tr><td>2</td><td>மூன்றாம் மற்றும் நான்காம் வகுப்பு</td><td>2000.00</td><td>200.00</td><td>300.00</td></tr>
<tr><td>3</td><td>ஐந்தாம் வகுப்பு</td><td>1000.00</td><td>100.00</td><td>250.00</td></tr>
</table>

மேற்கண்ட கட்டணம் Engineering Manual-2000-2001ல் வருடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது. தற்சமயம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் கீழ்க்கண்டவாறு புதிய பதிவு கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணத்தை உயர்த்தி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>வகுப்பு விவரம்</th><th>புதிய பதிவு கட்டணம்</th><th>புதுப்பித்தல் கட்டணம்</th><th>விண்ணப்பக் கட்டணம் + விற்பனை வரி</th></tr>
<tr><td>1</td><td>முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு</td><td>6000.00</td><td>2000.00</td><td>1000.00</td></tr>
<tr><td>2</td><td>மூன்றாம் மற்றும் நான்காம் வகுப்பு</td><td>4000.00</td><td>1000.00</td><td>500.00</td></tr>
<tr><td>3</td><td>ஐந்தாம் வகுப்பு</td><td>2000.00</td><td>500.00</td><td>250.00</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு :

**மன்றம்** அனுமதிக்கலாம்.

</td><td>தீர்மான எண்.35<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2 | **36.** காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு வாடகை மறுசீராய்வு செய்யப்பட்டது. வாடகை உயர்வாக உள்ளதென கடை உரிமதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கு தொடர்ந்த கடைகளுக்கு வாடகை செலுத்தாமல் இருந்து வந்த காரணத்தால் மேல்நடவடிக்கை தொடர்வது குறித்து வழக்கறிஞரிடம் சட்டக் கருத்துரு கோரப்பட்டது- 28.12.2019 அன்று சட்டக் கருத்துரு வழங்கப்பட்டதற்கு திரு.பி.மகேந்திரன், வழக்கறிஞர் ரூ.5,000/- வழக்கறிஞர் கட்டணம் வழங்குமாறு பட்டியல் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.5236/2016/அ1) | **தீர்மான எண்.36**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | 3 | 37. நாடு முழுவதும் "கொரோனா" தொற்று பரவி வருவதை கருத்தில் கொண்டு 144 தடை உத்தரவு காரணமாக இந்நகராட்சி அண்ணா தினசரி நாளங்காடி வளாகத்தில் இயங்கி வரும் நிரந்தர காய்கறி கடைகளை இந்நகராட்சிக்கு உட்பட்ட கழனிவாசல் வாரச்சந்தையில் வியாபாரம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேற்படி வளாகத்தில் ஆங்காங்கே போடப்பட்டுள்ள தற்காலிக தரைக்கடைகளை ஒழுங்குபடுத்தி கடை நடத்திக் கொள்ள அனுமதித்திடவும் கொரோனா தொற்று காரணமாக 144 தடை உத்தரவு நீங்கும் வரை நிர்வாக நலன் கருதி ஆங்காங்கே தற்காலிக கடைகள் நடத்துவதை ஒழுங்குபடுத்தி தரைக் கடைக்காரர்களிடம் இந்நகராட்சி வருவாய் பணியாளர்களைக் கொண்டு அலுவலகம் வாயிலாக தினசரி கட்டணம் ரூ.50/- வீதம், 13.06.2020 முதல் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. நிர்வாக நலன் கருதி அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2033/2020/அ1) | **தீர்மான எண்.37**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | 4 | 38. காரைக்குடி நகராட்சி வார்டு எண்.4, பிளாக் எண்.10, நகரளவு எண்.419, மனை எண்.2ல் அமைந்துள்ள இடத்தில் அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாக திரு.பெவின் மற்றும் மூவர் வணிக உபயோகக் கட்டிடம் கட்டிவருகிறார்கள். அக்கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு–56 மற்றும் 57ன் கீழ் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் அறிவிப்பு அனுப்பிய பின்னும் திருத்திய வரைபடம் Online மூலம் சமர்ப்பிக்காததால் அவர்கள் அறிவுரையின் பேரில் இறுதி அறிவிப்பு நகராட்சி மூலம் வழஙகப்பட்டது. மேற்கூறிய அறிவிப்புகளின் பேரில் கட்டிட உரிமையாளர்கள் நகராட்சி மீது வழக்கு தொடராமல் இருக்க தேவகோட்டை சார்பு நீதிமன்றம் மற்றும் காரைக்குடி மாவட்ட உரிமையியல் நிதிமன்றத்தில் நகராட்சி சார்பில் கேவியட் மனு தயாரித்து தாக்கல் செய்யவும் | **தீர்மான எண்.38**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | நகராட்சி சார்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் நகர்மன்ற வழக்கறிஞர் திரு.கிருஷ்ணன் அவர்கள் வழக்கை நடத்திடவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.12000/—க்கான பட்டியல் பெறப்பெற்றுள்ளது. மேற்கூறிய தொகையினை வழங்கவும் வழக்கிற்கான மொத்த செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>அனுமதிக்கலாம்.<br>(மே.மு.க.எண்.42/2019/எப்1) | |
| | **5** | 39. இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் எண்.TN63 T 2437-க்கு பழுதுகள் சரிசெய்யும் பணிக்கு **15.06.2020** அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/s.ஆட்டோ டெக் சர்வீஸ், புதுக்கோட்டை - ரூ. 11,560/—<br>2. M/s.பிரபுகுமார் ஆட்டோ மொபைல்ஸ், காரைக்குடி - ரூ.13,000/—<br>3. ஸ்ரீ வெஙகடேஸ்வரா ஆட்டோமொபைல்ஸ், தேவகோட்டை - ரூ.14,000/—<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழஙகிய M/s.ஆட்டோ டெக் சர்வீஸ், புதுக்கோட்டை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.39<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **6** | 40. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டாட்டா ஏசி ஐந்து வண்டிகள்<br>1) TN63 BX 2070 - ரூ.19262/-<br>2) TN63 BX 2045 - ரூ.19262/-<br>3) TN63 BX 2021 - ரூ.19262/-<br>4) TN63 BY 5323 - ரூ.19262/-<br>5) TN63 BY 5314 - ரூ.19262/-<br>-------------------<br>மொத்தம் ரூ.96310/-<br>------------------<br>மேற்கண்ட வண்டிகளுக்கு இன்சூரன்ஸ் கட்டி வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.96310/- ஆகும். எனவே அவசர அவசியம் கருதி ஆணையரின் அனுமதியும் மற்றும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.40<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | 2. பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1877/2020/எச்1) | |
| | **7** | 41. காரைக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி வீடு வீடாக சென்று டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் டெங்கு மற்றும் ஏடீஸ் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அதற்கு (DBC) பணியாளர்கள் (Domestic Breeding Chekker) நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். இதற்கான அனுமதி ஜீன் 2020 வரை பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு 3 மாதத்திற்கு ஒரு முறை அனுமதி பெற்று DBC பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். தற்போது ஜீலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை 3 மாதங்களுக்கு அனுமதி பெற வேண்டியுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் பொது சுகாதார துறை இயக்குநர் அலுவலக அறிவுறுத்தல்படி ஒவ்வொரு 300 வீடுகளுக்கு IDBC பணியாளர்கள் வீதம் இந்நகராட்சிக்கு 90 DBC பணியாளர்கள் வரை நியமிக்கப்பட வேண்டும் இதற்கான ஊதியம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊதிய பட்டியலின்படி தினசரி ரூ.270/- வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி மாதம் 1க்கு 90 பணியாளர்கள் ரூ.270/- வீதம் 26 நாட்களுக்கு (90 x 270 x 26 = 631800) ரூ.631800/- வீதம் 3 மாதங்களுக்கு (631800 x 3=1895400) இதற்கான உத்தேச செலவு ரூ.1895400/- (பதினெட்டு இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரத்து நானூறு ரூபாய் மட்டும்). எனவே ஜீலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை 3 மாதங்களுக்கு 90 பணியாளர்கள் வரை நியமனம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.18,95,400/- ஆகும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3245/2017/எச்1) | **தீர்மான எண்.41 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **8** | 42. இந்நகராட்சி பணியாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற திரு.பி.குமரப்பன், குழாய் திறப்பாளர் மற்றும் திரு.எஸ்.ராஜேந்திரன், பதிவறை எழுத்தர், ஆணையர், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD) No.14967 of 2019 மற்றும் WP(MD) No.14968 of 2019ல் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்த காலத்திற்கு 50 சதவீதம் ஓய்வூதியம் பயன்கள் வழங்கக் கோரி வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே இவ்வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகிய வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் அவர்களுக்கு கட்டணம் (2 வழக்குக்கு) ரூ.15000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.42 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>9</td><td>43. இந்நகராட்சியில் குடிநீர் குழாய் பொருத்துனராக பணியாற்றி வந்த திரு.பா.தொண்டிராஜ் 28.04.2011 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் தனக்கு 50 சதவீதம் பிழைப்பூதியம் வழங்கப்பட்டு வந்ததை 75 சதவீதமாக உயர்த்தியும், மீண்டும் பணி வழங்க கோரி, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் Contempt Petition (MD) No.284 of 2020ல் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.7500/-ஐ செலுத்திடவும், இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2649/2011/சி1)</td><td>தீர்மான எண்.43<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>10</td><td>44. காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2019–2020ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில், காரைக்குடி நகராட்சி 5வது வார்டு சிதம்பரம் தெருவில் பாலம் கட்டுதல் பணிக்கு 19.02.2020ல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன்பேரில் கடந்த 20.03.2020, 08.04.2020 மற்றும் 12.05.2020 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. இறுதியாக 05.06.2020ல் நான்காவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டில் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட 4.73% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட 9.05% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5 சதவீதத்திற்குள் உள்ளது. மேலும், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி மதிப்பீட்டை விட 4.73% அதிகம் உள்ள திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.44<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>11</td><td>45. காரைக்குடி நகராட்சி வார்டு எண்.3, பிளாக் எண்.25, நகரளவு எண்.737/1Aல் அமைந்துள்ள விஸ்தீரணம் 0.0741.0 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தை PR.சுப்பிரமணியன் என்பவருக்கு தவறுதலாக பட்டா வழஙகியதை ரத்து</td><td>தீர்மான எண்.45<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | செய்து மாவட்ட வருவாய் அலுவலர் சிவகஙகை அவர்களால் செயலானை உத்தரவு ந.க.எண்.ப.மு.பி.4466/16 நாள்.27.05.2020ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் வட்டாட்சியர் காரைக்குடி அவர்களுககு நகராட்சி ஆணையரின் பெயரில் பட்டா மாறுதல் செய்து தரக்கோரி 03.06.2020 அன்று நேரில் விண்ணப்பம் கொடுத்து வரப்பட்டது. அதன்பேரில் தலைமை இடத்து துணை வட்டாட்சியர் காரைக்குடி அவர்களின் பட்டா பதிவு மாறுதல் உத்தரவில் மேற்கூறிய இடம் பட்டா எண்.25363, ஆணையாளர் காரைக்குடி நகராட்சி என்ற பெயருக்கு பதிவு மாற்றம் செய்து உத்தரவு வரப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் உத்தரவில் எதிர்மனுதாரர் மேற்கூறிய உத்தரவு கிடைக்கப்பெற்ற 30 தினஙகளுக்குள் உரிய சிவில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>எனவே, நகராட்சி மீது எதிர்மனுதாரர் PR.சுப்பிரமணியன் என்பவர் வழக்கு தொடராமல் இருக்க நகராட்சி சார்பில் கேவியட் மனு தாக்கல் செய்ய நகர்மன்ற வழக்கறிஞர் திரு.V.S.கிருஷ்ணன் அவர்களை கேட்டுக்கொள்ளலாம். மேலும் வழக்கிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/– வழக்கறிஞர் அவர்களுக்கு வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>நகராட்சிக்கு சொந்தமான இடத்திற்குரிய நீதிமன்ற நடவடிக்கைகளாக உள்ளதால் நகராட்சி சார்பில் ஆஜராகி கேவியட் மனுதாக்கல் செய்ய நகர்மன்ற வழக்கறிஞர் திரு. V.S.கிருஷ்ணன் அவர்களை நியமிக்கவும் வழக்கின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/–ஐ வழஙகியதற்கும், வழக்கிற்கு ஆகும் மொத்த செலவு தொகைக்கும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.<br>(ந.க.எண்.4064/2014/எப்1) | |
| | **12** | 46. **காரைக்குடி நகராட்சி வார்டு எண்**.4, **பிளாக் எண்**.3, **நகரளவு எண்**.132/1**பி**, 131/2**ல் அமைந்துள்ள அலமு இந்திரா அப்பார்ட்மென்ட் கட்டிடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களிடம் அனுமதிபெற்ற வரைபடத்தில் உள்ளவாறு கட்டப்படவில்லை எனவும் கழிவுநீரை முறையாக சுத்திகரிப்பு செய்யவில்லை எனவும் அந்த கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி அதனை இடிக்க கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது**. **வழக்கு எண்**.WP(MD) No.4394/2020**ல் மேற்கண்ட வழக்கில் நகராட்சி ஆணையரை** 3**ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டது**. **மேற்கூரிய வழக்கு** 02.03.2020**ம் தேதி அன்று விசாரனைக்கு வந்து அன்று தினமே இதனை பொதுநல வழக்காக கருத இயலாது எனத் தெரிவித்து வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்புரை வரப்பட்டுள்ளது**. **மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகிய திரு**.**பி**.**மகேந்திரன், நகர்மன்ற வழக்கறிஞர் அவர்கள் வழக்கிற்கான கட்டணம் ரூ**.7,500/-**ஐ வழங்க அதற்கான பட்டியல் அனுப்பி உள்ளார் மேற்கண்ட வழக்கிற்கான கட்டணத்தை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது**.<br>அலுவலகக்குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம். (**ந**.**க**.**எண்**.1275/2020/**எப்**1) | **தீர்மான எண்.46**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 13 | 47. காரைக்குடி நகராட்சி முத்துராமலிங்கம் நகர் பகுதியில் செல்போன் டவர் அமைக்க கூடாது என ஆட்சேபனை தெரிவித்து திரு.எஸ்.கே.சரவணன் என்பவர் வழக்கு எண்.WP(MD) No.21449/2019 மற்றும் WP(MD)No.23907/2019. மேலும் திரு.பிரசாத் என்பவர் வழக்கு எண். WP(MD)No.21468/2019ல் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. மேற்கூறிய வழக்கு எண். WP(MD)No.21449/2019 மற்றும் WP(MD)No.21468/2019ல் வழக்குகளை பொதுநல வழக்காக கருதி CIVIL COURT மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு வழக்கு 14.10.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் வழக்கு எண். WP(MD)No.23907/2019ஐ முதலாவது பிரதிவாதியான மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு தெரிவித்து வழக்கினை தள்ளுபடி செய்து 13.11.2019 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்கூறிய வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜராகிய திரு.பி.மகேந்திரன் அவர்கள் வழக்கிற்கான கட்டணம் வழங்குமாறும் அதற்குரிய பட்டியல் அனுப்பியுள்ளார். மேற்கண்ட வழக்குகள் WP(MD)No.21449/2019 ஆகிய மூன்று வழக்கிற்கான கட்டணம் ரூ.22,500/- வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4667/2019/எப்2) | தீர்மான எண்.47<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 14 | 48. காரைக்குடி நகராட்சி புதிய பேருந்து நிலையம் மையப் பகுதியில் அமைந்துள்ள கடை எண்.8ஐ பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் நேரக்காப்பாளர் அறை பயன்பாட்டிற்கு கோரப்பட்டது. மேற்படி கடைக்கு மாதம் வாடகை ரூ.3,500/- என நிர்ணயம் செய்யப்பட்டு, அவசர அவசியம் கருதி கடை எண்.8ஐ தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நேரக்காப்பாளர் அறை பயன்பாட்டிற்கு 01.10.2019ல் மாத வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது. எனவே 01.10.2019 முதல் கணிணியில் கேட்பு எழுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.3721/2019/அ1) | தீர்மான எண்.48<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 15 | 49. பொது மேலாளர், சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், காரைக்குடி அவர்கள் முடியரசன் சாலையில் உள்ள நூலகம் அருகில் 10" x 8" என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி கடிதம் கொடுத்துள்ளார். மேற்கூறிய இடத்திற்கு சார் பதிவாளரிடம் பெறப்பட்ட சந்தை வழிகாட்டி மதிப்பு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.21,640/- என்ற தொகையின் அடிப்படையில் இந்நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,700/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் நிதியினை பெருக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை | தீர்மான எண்.49<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி முடியரசன் சாலையில் உள்ள நூலகம் அருகில் மாத வாடகை ரூ.1,700/- என்ற அடிப்படையில் ஆவின் பாலகம் அமைக்க இட ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சியின் வருவாயினை பெருக்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி அனுமதி வழங்கும் பொருட்டு பின்னேற்பு பெறலாம்.<br>(ந.க.எண்.705/2020/எப்2)</td><td></td></tr>
<tr><td></td><td>16</td><td>50. பொது மேலாளர், சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், காரைக்குடி அவர்கள் அருணாச்சலம் செட்டியார் தெரு தேவகி மருத்துவமனை எதிர்புறத்தில் 10” x 10” என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி கடிதம் கொடுத்துள்ளார். மேற்கூறிய இடத்திற்கு சார் பதிவாளரிடம் பெறப்பட்ட சந்தை வழிகாட்டி மதிப்பு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.10,825/- என்ற தொகையின் அடிப்படையில் இந்நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.1500/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் நிதியினை பெருக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி, மேற்படி அருணாச்சலம் செட்டியார் தெரு தேவகி மருத்துவமனை அருகில் மாத வாடகை ரூ.1,500/- என்ற அடிப்படையில் ஆவின் பாலகம் அமைக்க இட ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சியின் வருவாயை பெருக்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி அனுமதி வழங்கும் பொருட்டு பின்னேற்பு பெறலாம்.<br>(ந.க.எண்.614/2020/எப்1)</td><td>தீர்மான எண்.50<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>17</td><td>51. காரைக்குடி நகராட்சியில் மத்திய மாநில அரசு நிதியின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு கீழ்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>
<table>
<tr><td>வ.எண்</td><td>திட்டத்தின் பெயர்</td><td>பணியின் விபரம்</td><td>மதிப்பீடு</td></tr>
<tr><td>1</td><td>அடிப்படை கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2019-2020</td><td>கணேசபுரத்தில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்</td><td>300.00</td></tr>
<tr><td>2</td><td>Micro Compost Centre</td><td>மக்கும் குப்பைகளை உரமாக்குதல்</td><td>325.00</td></tr>
</table></td><td>தீர்மான எண்.51<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>TURIP 2018-2019</td><td>சாலைப்பணிகள்</td><td>1000.00</td></tr>
<tr><td>4</td><td>Bio-Mining</td><td>நுண்ணுயிர் மையம்</td><td>737.00</td></tr>
<tr><td>5</td><td>KFW(Water Bodies) Scheme 2018-2019</td><td>ஊரணி மேம்பாட்டு திட்டம்</td><td>396.00</td></tr>
<tr><td>6</td><td>CSR (Water ATM) Fund 2018-2019</td><td>குடிநீர் விநியோகம்</td><td>648.00</td></tr>
<tr><td>7</td><td>Water Supply Internal Plumbing 2018-2019</td><td>குடிநீர் விநியோகம்</td><td>288.00</td></tr>
<tr><td>8</td><td>IUDM 2018-2019 (Road Work)</td><td>சாலைப்பணிகள்</td><td>1992.70</td></tr>
<tr><td>9</td><td>Drought Relief Scheme 2018-2019</td><td>குடிநீர் விநியோகம்</td><td>26.25</td></tr>
<tr><td>10</td><td>TNSUDP</td><td>சாலைப்பணிகள்</td><td>2025.00</td></tr>
</table>
மேற்கண்ட திட்டப்பணிகளை தவிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நீர்நிலைகள் மேம்பாடு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br>
மேற்கண்டவாறு நடைபெறும் திட்டப்பணிகளை கண்காணித்திடவும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல், புகைப்படங்கள் எடுத்து அதில் பணியின் பெயர் தட்டச்சு செய்து அனுப்புதல் மற்றும் அவ்வப்போது கோரப்படும் திட்டப்பணிகளுக்கு கருத்துருக்கள் தயார் செய்தல் போன்ற பணிகளை செய்திட உதவிப் பொறியாளர் ஒருவர் மட்டும் உள்ளதால் அவருக்கு உதவியாக கணிணி தட்டச்சு மற்றும் AUTOCAD தெரிந்த ஒரு நபரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை அடிப்படையில் OUTSOURCING முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்காக 85 நாட்களுக்கு (ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர்) உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>18</td>
<td>52. பொது மேலாளர், சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், காரைக்குடி அவர்கள் கல்லுக்கட்டி மேற்கு பகுதியில் 10” x 8” என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி கடிதம் கொடுத்துள்ளார். மேற்கூறிய இடத்திற்கு சார் பதிவாளரிடம் பெறப்பட்ட சந்தை வழிகாட்டி மதிப்பு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25,245/- என்ற தொகையின் அடிப்படையில் இந்நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் நிதியினை பெருக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி, மேற்படி கல்லுக்கட்டி மேற்கு பகுதியில் மாத வாடகை ரூ.2,000/- என்ற அடிப்படையில் ஆவின் பாலகம் அமைக்க இட ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மான எண்.52<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சியின் வருவாயை பெருக்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி அனுமதி வழங்கியமைக்கு பின்னேற்பு பெறலாம்.<br>(ந.க.எண்.1319/2020/எப்2) | |
| | **19** | 53. இந்நகராட்சி வார்டு எண்.06, அருணாநகர் பூங்காவில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் இயங்கிவந்த 30 எச்.பி நீரேற்றி மின் மோட்டார் பழுது நீக்கம் பணிக்கு அங்கீகாரம் பெற்ற CORAL REWINDING INDIA PRIVATE LIMITED, ஈரோடு நிறுவனத்திடமிருந்து ரூ.39,294/-க்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன்படி CORAL REWINDING INDIA PRIVATE LIMITED, ஈரோடு நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும், மேற்கண்ட செலவுத் தொகைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.53**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **20** | 54. காரைக்குடி நகராட்சி திரு.அஜ்மீர் அலி என்பவர் அவருக்கு சொந்தமான சிட்டி பிஸ்கட் கம்பெனி மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் காரைக்குடி நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.17831/19ல் **14.08.2019** அன்று வழஙகப்பட்ட தீர்ப்புரையில் அதே நிலை தொடரப்பட வேண்டும் (Status co) என உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் திரு. P.மகேந்திரன் அவர்களுக்கு வழக்கிற்கான கட்டணம் ரூ.**7500/–** ஐ வழஙகுமாறு கேட்டு பட்டியல் அனுப்பியுள்ளார். மேற்கண்ட தொகையை நகர்மன்ற வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். **3476/2019**/எப்2) | **தீர்மான எண்.54**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **21** | **55. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN63 T2417 எண் டிப்பர் லாரியின் கியர் பாக்ஸ் பழுதடைந்துவிட்டதால் கியர் பாக்ஸ் வேலை, கிளச்சு கிட்டு கீழ் மேல் கிட்டு மற்றும் ஸ்டேரிங் பாக்ஸ், எண்டுபாஸ், பீட்டியோ சுவிட்ச்சு, ஆயில் சர்வீஸ், நான்கு வீல் கிரீஸ் பேக்கிங், செல்ப்மோட்டார் டைனமோ இந்த வேலைகள் அனைத்தும் பார்க்க வேண்டி உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம்** | **தீர்மான எண்.55**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | **ரூ**.38,000/- **ஆகும்**. **இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது**.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2304/2020/எச்1) | |
| | **22** | 56. காரைக்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆண்டுக் குத்தகை இனம் முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூங்காவில் தினசரி நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை 2018-2019ம் ஆண்டு முதல் 2020-2021 வரை மூன்றாண்டுகளுக்கு திரு.கே.சுந்தரபாண்டியன் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டு வரை குத்தகை தொகை செலுத்தியுள்ளார். தற்போது 2020-2021ம் ஆண்டு மார்ச் முதல் “கொரோனா தொற்று” காரணத்தினால் தமிழக அரசால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பூங்கா மூடப்பட்டுள்ளது. தொடர்ந்து பூங்கா மீண்டும் எப்போது பயன்பாட்டிற்கு வரும் என தெரியாத நிலையில் மேற்கண்ட இனத்தை தொடர்ந்து நடத்த இயலாது என்பதால் என்னுடைய குத்தகை உரிமத்தை நடப்பு ஆண்டிற்கு ரத்து செய்து தன்னுடைய முன்வைப்புத் தொகையை வழங்குமாறு கோரி அன்னார் விண்ணப்பம் கொடுத்துள்ளார். அதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதன்பேரில், மேற்படி குத்தகை இனத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டுவர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி இனத்தை ரத்து செய்வதால் நகராட்சிக்கு இழப்பு ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு தொகையை அன்னாரிடமிருந்து வசூல் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2439/2020/அ1) | **தீர்மான எண்.56**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **23** | 57. இந்நகராட்சி நகர் நலப் பிரிவில் பொது சுகாதாரப் பணிகளுக்காக இயங்கி வந்த காம்ப்பாக்டர் வாகனம் TN63 AX 7205-ன் தகுதி சான்று **01.06.2019**ல் முடிவடைந்த நிலையில் உபயோகம் இல்லாததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது**.** மேற்கண்ட வாகனத்தை தவிர்த்து இந்நகராட்சியில் மேலும் இரண்டு காம்ப்பாக்டர் வாகனங்கள் (TN63 AT 7828 மற்றும் TN25 AQ 8404) நல்ல நிலையில் பொதுசுகாதாரப் பணிகளுக்காக இயங்கி வருகின்றன**.** தற்போது உபயோகத்தில் உள்ள **60** எண்ணம் பின்களுக்கு மேற்கண்ட இரண்டு காம்ப்பாக்டர் வாகனங்கள் போதுமானதாக உள்ளது**.** இந்நிலையில் உபயோகம் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனம் TN63 AX 7205 கடந்த **14.03.2013**ல் வாங்கப்பட்டுள்ளது**.** இவ்வாகனம் வாங்கப்பட்டு **7** ஆண்டுகளே ஆனதால் அதனை டிப்பர் லாரியாக மாற்றம் செய்தால் இதர பொதுசுகாதாரப் பணிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதால் மேற்படி காம்ப்பாக்டர் வாகனத்தை டிப்பர் லாரி வாகனமாக மாற்றம் செய்து தருமாறு நகர்நலப் பிரிவு மூலம் கோரப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.57**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td>அதன்பேரில், மேற்படி காம்ப்பாக்டர் வாகனத்தை டிப்பர் லாரி வாகனமாக மாற்றுவதற்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் வாகனத்தில் F.C பணிகள் செய்தல் மாற்றம் டிப்பர் லாரியாக மாற்றுதல் ஆகிய இரண்டிற்கும் சேர்த்து ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>24</td><td>58. இந்நகராட்சி குடிநீர் நிதி 2020-21ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.21, அரு.அ. தெருவில் DI பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 2.30% குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட 0.12% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.58<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>25</td><td>59. இந்நகராட்சி வருவாய் நிதி 2020-21ன் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி அலுவலக வளாகம் வடபுறத்தில் அமைந்துள்ள புதிதாக கட்டப்பட உள்ள புதிய கட்டிடத்தில் ஆர்.சி.சி மேற்கூரை அமைத்து மற்றும் கூடுதல் பணிகள் செய்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.11% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 1.42% குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.59<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **26** | 60. இந்நகராட்சி வருவாய் நிதி 2020-21ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளுக்கு தடுப்புகள் அமைத்து கப்போர்டுகள் அமைத்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்ண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><table><tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr><tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 1.85% குறைவு</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.60 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **27** | 61. இந்நகராட்சியில் உள்ள முத்துப்பட்டிணம் நகர்மன்ற பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் கட்டிடத்தில் சில இடங்களில் பூச்சுகள் மற்றும் தளத்தில் பதிக்கப்பட்டுள்ள டைல்ஸ்கள் பெயர்ந்தும் உள்ளன. மேலும், சுவர்களுக்கு அடிக்கப்பட்டுள்ள வர்ணம் பெயர்ந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பள்ளியில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் உள்ள பழுதுகளை மராமத்து செய்திடவும் மற்றும் வர்ணம் பூசி புதுப்பித்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>கல்வி நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.61 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **28** | 62. இந்நகராட்சியில் உள்ள வ.உ.சி நகர்மன்ற பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் கட்டிடத்தில் சில இடங்களில் பூச்சுகள் மற்றும் தளத்தில் பதிக்கப்பட்டுள்ள டைல்ஸ்கள் பெயர்ந்தும் உள்ளன. மேலும், சுவர்களுக்கு அடிக்கப்பட்டுள்ள வர்ணம் பெயர்ந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பள்ளியில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் உள்ள பழுதுகளை மராமத்து செய்திடவும் மற்றும் வர்ணம் பூசி புதுப்பித்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>கல்வி நிதியின் கீழ் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.62 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 29 | 63. இந்நகராட்சி வார்டு எண்.12ல் பருப்பூரணி பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் உள்ள 10 HP நீர்மூழ்கி மின்மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 27.05.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S.பாரதி எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.24,300/-<br>2. ஸ்ரீ கணேஷ் எலக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி - ரூ.25,920/-<br>3. ஸ்ரீ சுந்தரம் எலக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி - ரூ.26,000/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S.பாரதி எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் செலவுத் தொகை ரூ.24,300/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.63 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 30 | 64. இந்நகராட்சியில் கணேசபுரம் பகுதியில் நகரளவு எண்.240ல் துப்புரவு தொழிலாளர் குடியிருப்புகள் 24 எண்ணம் கடந்த 2011ம் ஆண்டில் கட்டப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது. குடியிருப்புகள் கட்டப்பட்டு 9 வருடங்கள் முடிந்த நிலையில் முறையான பராமரிப்பு இல்லாததால் குடியிருப்புகளில் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டும் மற்றும் கட்டிடம் முழுவதும் பெயின்ட் பெயர்ந்த நிலையிலும் உள்ளது. எனவே, மேற்படி 24 குடியிருப்புகளை கொண்ட கட்டிடங்களில் மராமத்து பணி செய்து, வர்ணம் பூசி புதுப்பித்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.64 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 31 | 65. மழைநீர் சேகரிப்பு மற்றும் பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நகரில் உள்ள அனைத்து நீர்நிலைகளுக்கும் மழைநீர் எவ்வித தடங்கலும் இன்றி செல்லும் வண்ணம் அனைத்து வரத்து கால்வாய்களையும் தூர்வாரி சுத்தம் செய்திட வேண்டும் எனவும், நகர்ப்புறங்களில் பிற துறைகளை சேர்ந்த வாய்க்கால்களாக இருந்தாலும் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தைக் கருதி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் நகரில் உள்ள அனைத்து வாய்க்கால்களை சுத்தம் செய்து தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்பேரில், இந்நகரில் உள்ள பிரதான மழைநீர் கால்வாய்களை HITACHI மற்றும் JCB வாகனங்களைக் கொண்டு தூர்வாரி சுத்தம் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.65 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 32 | 66. காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் நகராட்சி மூலம் NULM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நோயாளிகளின் உடனிருப்போர் தங்கும் விடுதி கட்டிடத்தின் முன்புறம் வாயில் அருகே ஷெட் அமைப்பதற்கும் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.66 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 33 | 67. இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2018-2019ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.5 அண்ணாநகரில் புதிய தினசரி நாளங்காடி கட்டிடம் நகராட்சி மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட நிதி பற்றாக்குறை காரணமாக மேற்கண்ட கட்டிடத்தில் மின் இணைப்பு பணிகள் மற்றும் மின் உபகரணங்கள் பொருத்துதல் போன்ற பணிகள் செய்திட இயலவில்லை. நகரில் உள்ள பொதுமக்களின் தேவைக்காக கட்டப்பட்டுள்ள கட்டிடம் என்பதால் அதில் ஏற்படுத்திட வேண்டிய அவசிய பணிகளான மின் இணைப்பு பணிகள், மின் உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் கட்டிடத்தின் முன்பகுதியில் நிழலுக்காக ஷெட் அமைத்தல் போன்ற பணிகள் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.67 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 34 | 68. இந்நகராட்சி வார்டு எண்.1ல் கழனிவாசல், அழகப்பன் அம்பலம் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் திரவக் குளோரினேசன் அமைக்க அதற்கான செட் மற்றும் ஆட்டோமேட்டிக் ஸ்பாட் குளோரினேசன் பம்பு மோட்டார் தொட்டிகள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 3.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.68 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 35 | 69. இந்நகராட்சியில் உள்ள ஆலங்குடியார் நகராட்சி பள்ளி வளாகத்தில் நடுநிலைப் பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு பள்ளிகளுக்கான வகுப்பறை கட்டிடங்களுக்கும் இடைப்பட்ட பகுதி மண்தரையாக உள்ளதால் மழைக்காலங்களில் அதிக அளவில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டு சேறும் சகதியுமாக மாறி வருகிறது. அதனால் மழைக் காலத்தில் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். அதனால் மேற்படி மண்தரையாக உள்ள பகுதியில் பேவர்பிளாக் தளம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>கல்வி நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.69 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 36 | 70. இந்நகராட்சியில் IUDM TURIP மற்றும் 14வது நிதிக்குழு மான்யம் ஆகிய திட்டங்களின் கீழ் பட்டுக்கோட்டையார் தெரு, கருணாநிதி நகர், சந்தன முத்துமாரியம்மன் மற்றும் உதயம் நகர், எஸ்.வி. அம்பலம் தெரு, பள்ளிவாசல் தெரு ஆகிய இடங்களில் புதிதாக தார்சாலைகள் அமைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளின் உயரம் அங்குள்ள மழைநீர் வடிகாலை விட உயராமாக உள்ளது. அதனால் தார்தளத்தின் ஓரங்கள் உடையும் நிலை உள்ளது. மேலும், சாலைகளில் செல்லும் வாகனங்கள் சாலையின் ஓரத்தில் இறங்கி விடுவதால் விபத்துகள் ஏற்படும் நிலை உள்ளது. மேற்கண்ட சாலைப் பணிகளின் மதிப்பீட்டில் வடிகால் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, மேற்கண்டுள்ள தெருக்களில் உள்ள வடிகால்களை உயர்த்திக் கட்டவும் மற்றும் தேவையான இடங்களில் பாலங்கள் அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.70<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | 37 | 71. இந்நகராட்சியில் IUDM TURIP மற்றும் 14வது நிதிக்குழு மான்யம் ஆகிய திட்டங்களின் கீழ் புதுச்சந்தை ரோடு, இராமசாமி தெரு, பனந்தோப்பு, வெங்கிடாசலம் தெரு, தெய்வராயன் தெரு ஆகிய இடங்களில் புதிதாக தார்சாலைகள் அமைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளின் உயரம் அங்குள்ள மழைநீர் வடிகாலை விட உயராமாக உள்ளது. அதனால் தார்தளத்தின் ஓரங்கள் உடையும் நிலை உள்ளது. மேலும், சாலைகளில் செல்லும் வாகனங்கள் சாலையின் ஓரத்தில் இறங்கி விடுவதால் விபத்துகள் ஏற்படும் நிலை உள்ளது. மேற்கண்ட சாலைப் பணிகளின் மதிப்பீட்டில் வடிகால் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, மேற்கண்டுள்ள தெருக்களில் உள்ள வடிகால்களை உயர்த்திக் கட்டவும் மற்றும் தேவையான இடங்களில் பாலங்கள் அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.71<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | 38 | 72. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு 13ல் உள்ள 15 HP நீர்மூழ்கி மின்மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 30.06.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S பாரதி எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.15,500/-<br>2. ஸ்ரீ கணேஷ் எலக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி - ரூ.16,270/-<br>3. ஸ்ரீ சுந்தரம் எலக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி - ரூ.17,760/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S பாரதி எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் செலவுத் தொகை | **தீர்மான எண்.72<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ.15,500/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | |
| | **39** | 72. இந்நகராட்சி தலைமை நீரூற்று நிலையத்தில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு 13ல் உள்ள 15 HP நீர்மூழ்கி மின்மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 30.06.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/Sபாரதி எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.15,500/-<br>2. ஸ்ரீ கணேஷ் எலக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி - ரூ.16,270/-<br>3. ஸ்ரீ சுந்தரம் எலக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி - ரூ.17,760/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாரதி எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் செலவுத் தொகை ரூ.15,500/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.72 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **40** | 73. காரைக்குடி நகராட்சியின் 2019-2020ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.73 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர்(பொ)
காரைக்குடி நகராட்சி